**திருத்தங்கள்**

01. பொது நிபந்தனைகளின் கீழ் இலக்கம் 12 ஆம் பிரிவு
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் பொதுப் பரீட்சைக்கான கட்டணம் ரூபா 500.00 எனத் திருத்தப்படுகின்றது.

02. அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகளின் திருத்தம்

(அ) தேசிய தொழில் தகைமை மட்டம் 5/6 (NVQ 5/6) முழுநேர டிப்ளோமா பாடநெறிகளுக்கு சேர்கின்ற போது NVQ 3/4 தகைமையுடன் ஒரு வருட அனுபவம் கோரப்பட்டுள்ள பாடநெறிகளுக்கு ஒரு வருட அனுபவம் எனும் தகைமை நீக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப NVQ 3/ 4 தகைமையுடன் சேர்வதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளுக்கு அனுபவம் தேவையில்லை.

03. ஒவ்வொரு பாடநெறிக்கும் என சேரத்துக்கொள்ளும் வயது 2022.01.01 ஆந் திகதிக்கு 17 வயதுக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும்.

04. சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிமூலங்களிலான வர்த்தமானி அறிவித்தல்களிடையே முரண்பாடுகள் காணப்படின் சிங்கள மொழி மூல வர்த்தமானி அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

05. சேர்த்துக்கொள்ளும் தகைமையாக NVQ 3/4 தகைமைகள் கவனத்திற்கொள்ளப்படும் போது NVQ 4 தகைமை பெற்றுள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

06. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் டிப்ளோமாவுக்கு அனுமதிப்பதற்கான தகைமையாக க. பொ. த. (உ.த.) பரீட்சையில் பொது ஆங்கிலப் பாடத்தில் **சாதாரண சித்திக்கு பதிலாக திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்**.

07. அலுவலக முகாமைத்துவத் துறையில் BCS 06 இன் கீழ் **செயலாளர் பயிற்சியில் தேசிய சான்றிதழ்** பாடநெறி தொடர் இலக்கம் 72A என புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

| தொடர் இல. | பாட நெறியின் குறியீடு | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | அனுமதிக்காகத் தேவைப்படும் தகைமைகள் | பாடநெறியின் போதனா மொழி/NVQ மட்டம் மற்றும் நடைபெறும் தொழில்நுட்பவியல் கல்லூரி/தொழில்நுட்பக் கல்லூரிகள் |
|---|---|---|---|---|
| 72 A | BSC 06 | செயலாளர் பயிற்சியில் தேசிய சான்றிதழ்<br><br>முழு நேரம் - பகல்<br><br>18 மாதங்கள்<br><br>(06 மாதகால தொழில்துறைப் பயிற்சி உள்ளடங்கும்) | 1. இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு க. பொ. த. (சா.த.) பரீட்சையில் போதனா மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் மற்றும் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>I. விண்ணப்பதாரிகளின் ஆங்கில மொழித்திறன் (பேச்சு, எழுத்து) அதிக கவனத்திற் கொள்ளப்படும்.<br>II. தேவைக்கு ஏற்ப விண்ணப்பதாரிகளின் ஆங்கில மொழித் தேர்ச்சியைப் பரீட்சிப்பதற்கு எழுத்துப் பரீட்சையொன்று நடத்தப்படும்.<br>2. 2022.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். | **ஆங்கில மொழி மூலம்**<br>**NVQ மட்டம் 4**<br><br>யாழ்ப்பாணம், பதுளை, காலி, கண்டி, மருதானை, மட்டக்களப்பு, கம்பஹா, ஹோமாகம, களுத்துறை, கேகாலை, குளியாப்பிட்டி, மாத்தளை, சம்மாந்துறை, பலப்பிட்டி |

08. பின்வரும் குறியீட்டு எண்களில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி நேர பாடநெறிக்கான தகுதியுடையவர்களை சேர்த்துக்கொள்வதற்கு பின்வரும் மேலதிக தகுதியுடையவர்கள் சேர்த்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

| தொடர் இல. | பாடநெறியின் குறியீடு | பாடநெறியின் பெயர் மற்றும் தன்மை | மேலதிகமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட தகைமைகள் |
|---|---|---|---|
| 95 | ETC 01.1 | நிர்மாணத் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா ( தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் NCT Civil Engineering) | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வாறு க.பொ.த.(சா.த.) பரிட்சையில் போதனா மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்), கணிதம், விஞ் ஞானம் மற்றும் மூன்று பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் (06) சித்தி யடைந்திருத்தல் வேண்டும். மற்றும் திறமைகளின் அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட மாண வர்கள் பாடநெறியின் இரண்டாம் ஆண்டு முடிவதற்கு முன் சம்பந்தப் பட்ட பாடநெறியிலிருந்து NVQ 4 தகுதியினை கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும். |
| 83 | ETC 02.1 | மின்னியல் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (மின் மற்றும் இலத்திரனியல் NCT electrical and electronic) | |
| 101 | ETC 04.1 | கணிய அளவையியல் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (தேசிய தொழில் நுட்பச் சான்றிதழ் - NCT Quantity Surveying) | |
| 104 | ETC 08.1 | உற்பத்தித் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) பொறிமுறைப் பொறியியல் - உற்பத்தித் தொழில்நுட்பம்) | |
| 105 | ETC 09.1 | மோட்டார் வாகன தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் - பொறிமுறைப் பொறியியல் (NCT mechanical - Automobile) | |

09. ஏனைய திருத்தங்கள்

| தொடர் இல. | பாடநெறியின் குறியீடு | திருத்தப்பட வேண்டிய விதம் |
|---|---|---|
| 06 | A01S018 | இந்தப் பாடநெறியின் பெயர் **தாவர திசு வளர்ப்பு ஆய்வுகூட உதவியாளர்** என மாற்றப்படுகின்றது. |
| 23 | F45S004 | மரவேலை தொழில்துறை (கட்டிடம்) பாடநெறி NVQ 3 மட்டம் நடைபெறும் இடமாக திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரியும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். |
| 34 | F45S006 (ECC 78) | நிர்மாணத் தள மேற்பார்வையாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறியின் காலம் முழு நேரம் பகல் 18 மாதங்கள் (06 மாதகால தொழில்துறைப் பயிற்சி உள்ளடங்கும்) என திருத்தப்படுகின்றது. இங்கு குறியீட்டு எண் ECC 78 என மாற்றப்பட்டுள்ளது. |
| 47 | ECC 08 | பொறியியல் பயிற்சிக்கான தேசிய சான்றிதழ் - (இலத்திரனியல்) பாடநெறி NVQ மட்டம் 4 நடைபெறும் இடமாக மருதானை தொழில்நுட்பக் கல்லூரியும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். |
| 49 | E40S001 | மின் தொழில்நுட்பவியலாளர் பாடநெறியில் NVQ 3 மட்டத்துக்கு நுழைவதற்கான தகைமையாக தரம் 09 சித்தியடைந்திருத்தல் மற்றும் NVQ 4 மட்டத்துக்கு நுழைவதற்கான தகைமையாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாது க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆறு பாடங்களில் (06) சித்தியடைந்திருத்தல் என திருத்தப்படுகின்றது. |
| 53 | I-64S001 | தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியலாளர் பாடநெறியில் தொழில்துறைப் பயிற்சி 12 மாதங்கள் என திருத்தப்படுகின்றது. |
| 62 | ECC 26 | களுத்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும் எந்திரவியல் தொடர்பான சான்றிதழ பாடநெறியில் **NVQ மட்டம் 3** இற்குப் பதிலாக **NVQ மட்டம் 4** என திருத்தப்பட வேண்டும். |
| 75 | D29S002 | குளிரேற்றல் மற்றும் வளிச்சீராக்கலில் பாடநெறி NVQ 3 நடைபெறும் இடமாக திருகோணமலை தொழில்நுட்பக் கல்லூரியும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். |
| 83 | ETC 02.1 | மின்னியல் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான நுழைவுத் தகைமைகள், க. பொ. த. (உ.த.) பரீட்சையில் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (GIT, பொது ஆங்கிலம் தவிர) என திருத்தப்படல் வேண்டும். |

| தொடர் இல. | பாடநெறியின் குறியீடு | திருத்தப்பட வேண்டிய விதம் |
|---|---|---|
| 86 | ETB 29 | காற்றமுத்த மற்றும் நீரியக்க தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான நுழைவுத் தகைமைகள் பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும்.<br><br>1. உரிய துறையில் NVQ மட்டம் 03 அல்லது NVQ மட்டம் 4 சான்றிதழைப் பெற்றிருத்தல் (இங்கு உரிய துறையில் ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியொன்றைக் கற்று NVQ மட்டம் 4 ஐப் பெற்றுள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)<br><br>அல்லது<br><br>2. க. பொ. த. (உ.த.) பொறியியல் தொழில்நுட்பம்/ கணிதம்/ விஞ்ஞானம் போன்ற பாடத்துறைகளில் இருந்து குறைந்தது மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.<br><br>அல்லது<br><br>3. கலைப்பிரிவில் வன் தொழில்நுட்பவியலின் கீழ் (Hard Technology) மின்னியல் தொழில்நுட்பம் (Electrical Technology), இலத்திரனியல் தொழில்நுட்பம் (Electronic Technology), பொறிமுறைத் தொழில்நுட்பம் (Mechanical Technology), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) ஆகிய பாடங்களுள் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>2022.01.01 ஆந் திகதியன்று 17 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். |
| 95 | ETC 01.1 | நிர்மாணத் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (Civil Engineering) பாடநெறி நடைபெறும் இடமாக பலப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரியும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். |
| 111 | ETB 11 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமாவுக்கு சேர்த்துக்கொள்ளும் தகைமை உரிய துறையில் NVQ மட்டம் 03 அல்லது 04 சான்றிதழைப் பெற்றிருத்தல் எனத் திருத்தப்படுகின்றது. சேர்த்துக்கொள்ளும் ஏனைய தகைமைகள் மாற்றமடையாது அவ்வாறே இருக்கும். |
| 121 | ETA 22 | கடல்சார் மற்றும் வழங்குகை முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி NVQ மட்டம் 5/ 6 இணைந்ததாகவும் பாடநெறிக் காலம் 2 1/ 2 பகல், முழுநேரம் எனவும் திருத்தப்படுகின்றது. (06 மாத கால தொழில்துறைப் பயிற்சி உள்ளடங்கும்.) |

03 - 22

